Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 22 வெள்ளிக்கிழமை (04-04 1997) UTHAYAN A Lively Neonatli Tamil Daily கதிர்: 128

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒன்றிணைந்து செயற்பட சந்திரிகா - ரணில் இணக்கம்!

கொழும்பு, ஏப். 4

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு, ஆளுங்கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஒருங்கிணைந்து, ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு இணங்கியுள்ளன.

எந்தக்கட்சி அதிகாரத்தில் உள்ளது, எந்தக்கட்சி எதிர்க்கட்சியாக உள்ளது என்பதனைப் பொருட்படுத்தாது இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே அணியாகச் செயற்படுவது என்பது அந்த இணக்கப்பாட்டின் முக்கிய அம்சமாகும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட வேறு எந்தக் கட்சியுடனும் அல்லது எவருடனும் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மறைமுகமாக இடையூறு விளைவிக்காது என்பதும் இருசாராருக்கும் இடையிலான இணக்கத்தின் மற்றொரு பிரதான அம்சமாகும்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரே அணியாக இணைந்து செயற்படுவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கடிதங்களைப் பரிமாறி இத்தகைய இணக்கத்துக்கு வந்துள்ளனர். இத் தகவலை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று வெளியிட்டார்.

அமைச்சர் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் விடுத்தார். சந்திரிகா, ரணில் ஆகிய இருவரும் பரிமாறிக்கொண்ட கடிதங்களின் பிரதிகளையும் அமைச்சர் பத்திரிகையாளர்களுக்கு வழங்கினார்.

14 வருடங்களாக நடைபெற்று வரும் போருக்கு முடிவு கட்டி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கட்சிகளிடையே பொது அணுகுமுறையை ஏற்படுத்தும் நோக்குடனேயே புதிய இணக்கம் ஏற்பாடு செய்யப்பட்டதாக அமைச்சர் மேலும் சொன்னார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மல்கம் ரீக்கிண்ட், பிரதி அமைச்சர் லியம் பொக்ஸ் ஆகியோர் அரசு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தீர்வில் பிரிட்டனின் மத்தியஸ்தத்துக்கு இலங்கை ஆதரவு

## அமைச்சர் லியம் பொக்ஸ் கொழும்பு வந்து முக்கிய பேச்சு நடத்தி விட்டுத் திரும்பினார்

கொழும்பு, ஏப்ரல் 4

**இலங்கை இனப்பிரச்சினையில் பிரிட்டன் மத்தியஸ்தம் வகிப்பதற்கு இலங்கை அரசு பச்சைக் கொடி காட்டி உள்ளது. வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பிரிட்டனின் மத்தியஸ்தத்துடன் ஏற்படக் கூடிய ஒப்பந்தம் ஒன்றை வரவேற்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றுத் தெரிவித்தார்.**

பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம்பொக்ஸ் கடந்த செவ்வாய் இரவு இலங்கை வந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் முக்கிய பேச்சுக்களை நடத்தினார். அடுத்தநாள் புதன் கிழமை அவர் நாடு திரும்பினார்.

இனப் பிரச்சினைத் தீர்வில் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் இணக்கம் ஒன்றுக்கு வருவதற்கு இந்தச் சந்திப்பு உதவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் கடந்த எட்டுமாதங்களில் மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஏற்கனவே இடம் பெற்ற இரு விஜயங்களின் போதும் அரசதரப்பினருடனும் எதிர்க்கட்சியினருடனும் தமிழ்க் கட்சிகளுடனும் அவர் பேச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



இந்த இணக்கம் உரிமைகளை வழங்குவதிலும் ஏற்பட வேணுமே...!

## பேச்சு நடத்த எடுக்கப்படும் முயற்சிக்கு கூட்டணி வரவேற்பு

லண்டன், ஏப். 4

''வடக்கு — கிழக்கு மாகாணத்தில் 70 சத வீதம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிரது. புலிகள் சக்தி மிகுந்தவர்களாக உள்ளார்கள். எனவே அவர்களோடு பேசித்தான் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். இந்தவகையில் புலிகளுடன் பேச்சு நடத்த எடுக்கப்படும் முயற்சி வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும்''

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தென் ஆபிரிக்காவில்

## புலிகளின் பிரமுகர் திலகரை அமைச்சர் பீரிஸ் சந்திப்பார்?

கொழும்பு, ஏப். 4

தற்சமயம் தென் ஆபிரிக்காவுக்குச் சென்றுள்ள நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ். அங்கு விடுதலைப்புலிகளின் சர்வதேசத் தொடர்பாளர் லோறன்ஸ் திலகரைச் சந்திக்கக்கூடும்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் வார ஏடு ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தீவிரமாக அக்கறை கொண்டுள்ள தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் முன்னிலையில் இச்சந்திப்பு இடம்பெறலாம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

திருகோணமலை, ஏப்.4

திருகோணமலையில் ''ரன்டுல்ல'' என்ற பெயரில் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்துள்ளனர்.

திரியாய், கல்லநாவ, கொடவைக்கட்டு ஆகிய பிரதேசங்கள் உட்பட பெரும்பாலான பகுதிகளில் இந்த இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இராணுவ நடவடிக்கையின் முதலாம் நாளில் ஒரு படை வீரர் கொல்லப்பட்டதாகவும் — 9 படையினர் காயமடைந்ததாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

புலிகள் தரப்பில் 20 பேர் கொல்லப்பட 40 பேர் காயமடைந்ததாகவும் திரியாய் பகுதியில் காடுகளில் இயங்கிய 7 முகாம்களையும் மூன்று பெரிய முகாம்களையும் அழித்துள்ளதாகவும் படையினர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## பிரிட்டிஷ் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் இருவர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஏப். 4

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் நேற்று முன்தினம் வந்துள்ள இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு வாரம் தங்கியிருப்பர். (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராயப்பு கிறிஸ்தோப்பர்

(பொபி ஸ்ரூடியோ உரிமையாளர்,
கூழாவடி, ஆனைக்கோட்டை)

நவாலி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 24, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு கிறிஸ்தோப்பர் 1 - 4 - 97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய மனுவல் இராயப்பு — அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், மரியபெனியின் அன்புக் கணவரும், திருமதி அமலதாஸ் மரியரஜனி (முன்னாள் தட்டெழுத்தாளர், யாழ். வணிகர் கழகம் — கொழும்பு), கி. ஞானசீலன் (முன்னாள் சீலன் களஞ்சிய உரிமையாளர்), கி. ஜெயபாலன் (படப்பிடிப்பாளர்— வன்னி), கி. விஜிமரியா (முன்னாள் ஆசிரியை திருக்குடும்ப ஆங்கில பாலர் பாடசாலை), கி. புவனதாசன் (லிகிதர், புதுக்குடியிருப்பு கச்சேரி), கி. சுரேஸ் (படப்பிடிப்பாளர் — வன்னி), கி. ரஞ்சித்குமார் (வன்னி), கி. எட்மன் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்), கி. ரெஜி (திருக்குடும்ப கன்னியர்மடம், ஆங்கில பாடசாலை மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தி. அமலதாஸ் (படவரைஞர், கொழும்பு) அவர்களின் மாமனாரும் திருமதி சாமிநாதர் றோஸ், பொன்மலர், இராயப்பு பத்திநாதர் (முன்னாள் இ. மி. ச. பணியாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (7ஆம் வட்டாரம் விடத்தல்தீவு) வன்னியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கி. ஞானசீலன் (மகன்)

இல 93. ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(46159)

## கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை

தொல்புரம் டச்சு வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரும், பிலவத்தை அ. மி. த. க. பாடசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினருமாகிய கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை அவர்கள் 2-4-97 இல் சிவபதம் அடைந்தார்,

அன்னார் மகாலட்சுமியின் (கண்ணம்மா) அன்புக் கணவரும், திருமதி சுகிர்தா மகேந்திரன், திரு. கங்காதரன் (ஜேர்மனி), திருமதி மஞ்சுளா சற்குணபவான் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (4-4-97) காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கியாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா. மகாலட்சுமி
(மனைவி)

தொல்புரம் கிழக்கு,
தொல்புரம்.
(46153)

## இராசதுரை தேவகுமார் (தேவா)

கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் பூதர்மடம் கோப்பாயை வசிப்பிடமாகவும், தற்சமயம் பல்லவராயன்கட்டு பூநகரியில் வசித்தவருமாகிய இராசதுரை தேவகுமார் (தேவா) 26- 03- 1997இல் பூநகரியில் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் சந்திரா தம்பதிகளின் மகனும், வாகினியின் அன்புக் கணவரும், பிரசாந்தன், பிரசாந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும், சதீஸ்குமார், சந்திரகுமார் (குட்டி), திலீப்குமார், ஜோன்ஸ்குமார், உதயகுமார், காயத்திரி, ரோஜான் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராஜா டொமினிக்கின் சகலனும், திருமதி டொமினிக் பவானியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பூநகரியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரகுமார் (குட்டி)
(சகோதரன்)

வராகி அம்மன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(46160)

## ஆனந்தம் சண்முகம்

எழுதுமட்டுவாள் வடக்கைப் பிறப்பிடமாகவும் வங்களா வீதி, மீசாலை மேற்கில் வசித்தவருமாகிய ஆனந்தம் சண்முகம் (பிரபல சோதிடர், ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களம்) அவர்கள் 03- 04- 97இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், இராசபுவனச் சந்திரன் (அரசாங்க புகையிரதப்பகுதி, புத்தளம்), இராசகுலச் சந்திரன் (அரசாங்க புகையிரதப்பகுதி), இராச ரவிச்சந்திரன், இராஜேஸ்வரன், நித்தியகலா ஈஸ்வரி, ஸ்ரீமதி, ஸ்ரீரஞ்சினி (ஆசிரியை, அல்லாரை அ. த. க. பாடசாலை), ஸ்ரீலதா, ஸ்ரீசரவனபவானி, கிமாலினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புஸ்பலதா (புத்தளம்), சிவசேகரன், சத்தியமூர்த்தி, தயராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவ், ரூபாசாலினி, சுகி, நிசாந்த், கஜந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கண்ணாடிப்பிட்டி, சாவகச்சேரி இந்து மயானத்தில் 03- 04- 1997இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

மீசாலை.
(9467)

## பரீட்சை மேற்பார்வை அலுவலருக்கு

யாழ்ப்பாணம், ஏப் 4

கடந்த காலங்களில் நடந்த பொதுப்பரீட்சைகளின் போது கடமை புரிந்த பரீட்சை ஆளணியினருக்கு பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு காலாவதியான காசோலைகளை வைத்திருக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் அவற்றை வலயம் ஒன்று கல்வி அலுவலகத்தில் இன்று ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

## குளவிகொட்டி 65 மாணவர் ஆஸ்பத்திரியில்

கருங்குளவிகள் கொட்டியதால் மாணவர்களும், ஆசிரியர்களுமாக 65 பேர் செட்டிகுளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நொச்சிக்குளம் வித்தியாலயத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

இப்பொழுது அப் பகுதியில் கடும் காற்று வீசுவதால் பனை ஓலையில் கூடு கட்டி இருக்கும் குளவிகள் கலைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## கடைகள் முழு நாளும் திறந்திருக்கும்

புத்தாண்டு தினத்தை முன்விட்டு நாளை சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும்— அதன் பின் வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் வர்த்தக நிறுவனங்கள் முழு நாளும் திறந்திருக்கும்.

மக்கள் தமது பொருள்களை நெருக்கடி இன்றிக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக வர்த்தக நிறுவனங்களை திறக்குமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கோரி உள்ளது.

(இ)

## சுழிபுரத்தில் தேடுதல்

சுழிபுரம் கிழக்கு, பண்ணாகம் பகுதிகளில் படையினர் நேற்று சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். நண்பகலுக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

(இ-28)

## தொண்டர் ஆசிரியருக்கு

வடமராட்சி, ஏப். 4

கரவெட்டி, மருதங்கேணி கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி வரை தொடர்ச்சியாகக் கடமையாற்றி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள், போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளியைத் தத்தமது பாடசாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-173)

## அனுமதியின்றி கட்டடம் கட்டத் தடை

தென்மராட்சி, ஏப்.4

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்பது பிரதேச சபையினால் தடை செய்யப்பட்டுள்ளது.

கட்டடங்கள் புதிதாக அமைக்கவுள்ளோர் தத்தமது பகுதி பிரதேச சபை உப அலுவலகங்களில் அதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பிரதேச சபை செயலாளர் ஐ. வைரமுத்து அறிவித்துள்ளார்.

(இ-117)

## உள்ளூ. ஒய்வூதியரின் வவுச்சர்கள்

நவாலி, ஏப் 4

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஒய்வூதியர்களின் மார்ச் மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலக ஒய்வூதியப் பிரிவுக்கு நேற்று மாலை வந்து சேர்ந்தன.

இவை இன்று உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்—

ஒய்வூதியர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை இதனைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-100)

## வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்று அதன் உயர் பீடத்தை அலங்கரிக்கின்ற எங்கள் கல்லூரியின் பழைய மாணவராகிய

**பேராசிரியர்**
**பொ. பாலசுந்தரம்பிள்ளை**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதமும் பெருமகிழ்வும் அடைகின்றோம்.

**பதில் அதிபர், ஆசிரியர்கள்,**
**துணை ஆளணியினர், மாணவர்கள்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

[சி/431]

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி யாழினியின்
பாசமிகு தந்தை

**வ. சற்குணானந்தசோதி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**1998 'A' விஞ்ஞானபிரிவு மாணவிகள்,**
**யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.**

(46162)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 — 07 — 1914

உதிர்வு: 05 — 03 — 1997

**திருமதி சிவலிங்கம் பார்வதி**

எமது அன்பான அன்னையின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் மற்றும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியமும் இன்று (04-04-97) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''துரையகம்''
சங்கானை வடக்கு,
பண்டத்தரிப்பு.
(46164)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இராசம்மா

(மாதகல்)

மாதகலை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசம்மா அவர்கள் 02 - 04 - 1997 இல் காலமாகிவிட்டார். இவர் பொன்னம்பலத்தின் (முன்னாள் ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) அன்பு மனைவியும், நடராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), சிறீஸ்கந்தராசா (வர்த்தக முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்), யோகமலர் (கனடா), இலட்சுமணமூர்த்தி (கனடா), புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03-04-1997 இல் திருகோணமலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தியாகராசா
(மருமகன்)

மாதகல்.
(46166)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை வாக்கெடுப்பைச் சந்திக்க தயார் என்கிறார் தேவகௌடா

புதுடில்லி, ஏப். 4

இம்மாதம் 11 ஆம் திகதியன்று நாடாளுமன்றக் கூட்டத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்கொள்ளவும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் எதிர்த்து. ஈடு கொடுக்கவும் தான் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதம மந்திரி தேவகௌடா நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் குறிப்பிட்ட சில அரசியற் கட்சிகள் தீவிர முயற்சி செய்வதாக தேவகௌடா குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை —

ஐக்கிய முன்னணி அரசு சந்தித்துள்ள நெருக்கடியில் இருந்து மீள பாரதீய ஜனதாக் கட்சி கைகொடுத்து உதவ முன் வரலாம் என்று அரசியல் வாதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

11ஆம் திகதி நடைபெறவுள்ள நம்பிக்கை வாக்கெடுப்பின் போது ஐக்கிய முன்னணி அரசு கவிழ்க்கப்பட்டு அவ்விடத்தில் காங்கிரஸ் கட்சி பதவியேற்பதை பாரதீய ஜனதாக் கட்சி அறவே விரும்பவில்லை; எனவே காங்கிரஸ் கட்சி பதவியைப் பிடிப்பதை தவிர்க்கும் முகமாக பாரதீய ஜனதாக்கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் பின்வாங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

தற்போதைய அரசியல் ஸ்திரமற்ற நிலையில்

## உலக அரங்கில்

பொதுத் தேர்தல்கள் உடனடியாகவோ அல்லது விரைவாகவோ வரப்போகிறது என்பது உண்மை தான். ஆனால் அத்தேர்தல்கள் காங்கிரஸ் கட்சியின் கேசரி தலைமையில் நடைபெறுவதைவிட ஐக்கிய முன்னணியின் தேவகௌடா தலைமையில் நடைபெறுவது பாரதீய ஜனதாவிற்கு அதிக வெற்றி வாய்ப்பினைக் கொடுக்கும் என அக்கட்சி கருதுகிறது —என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

## பேச்சுநடத்த வருமாறு அரபாத்-நத்தனியாகு இருவருக்கும் அதிபர் கிளின்ரன் அழைப்பு

ஜெருஸலேம், ஏப். 4

பலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையே வன்செயல்கள் தொடர்ந்து கட்டுமீறி அதிகரித்து வரும் வேளையில் —

நிலைமையில் தலையிட்டு இருதரப்பினரிடையேயும் இணக்க நிலை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் ஈடுபட்டிருக்கிறார்.

அமெரிக்க அதிபரின் அழைப்பை ஏற்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு திங்களன்று வாஷிங்டன் செல்லவுள்ளார்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கும் அமெரிக்காவுக்கு வருமாறு கிளின்ரன் அழைப்பு விடுத்துள்ளார், அவர் இதனை ஏற்றுக் கொள்வாரா என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-10)

## ஜார் மன்னனின் சிலை மொஸ்கோவில் தகர்ப்பு!

மொஸ்கோ, ஏப். 4

மொஸ்கோ நகரில் கடந்த புதன்கிழமை ரஷ்யாவின் இறுதி ஜார் மன்னனான இரண்டாவது நிக்கலஸின் சிலை வெடி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

''உழைப்பாளர் செம்படை'' என்னும் அமைப்பு இச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்றுள்ளது.

''ஆயிரக் கணக்கான விவசாயிகள், தொழிலாளர்களைக் கொலை செய்த ஜார் மன்னன் நிக்கலஸின் சிலை தகர்க்கப்பட்டுள்ளது. மாவீரன் லெனினின் உடலை மண்ணுக்குள் புதைக்க நினைக்கும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு இது எச்சரிக்கையாக அமையும்'' — என்று அந்த அமைப்பு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## பெண் பத்திரிகையாளர் கொலை

ரிரானா, ஏப். 4

ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் ஒருவர் கடந்த செவ்வாயன்று அல்பேனியாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அல்பேனிய நாட்டு நெருக்கடி நிலை தொடர்பான செய்திகளைத் திரட்டி தனது நாட்டுக்கு அனுப்புவதில் ஈடுபட்டிருந்த இவர் அல்பேனிய துறைமுகநகரான சராணியேயில் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார். (ஐ)

## பணயக்கைதி விவகாரத்தில் மாற்றமில்லை

லீமா, ஏப் 4

பெரு நாட்டு ''துபக் அமாறு'' போராளிகளுக்கும் அதிபர் அல்பேட்டோ பூஜி மோரியின் அரசுக்குமிடையே பரந்துபட்ட ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் நடந்துவருவதாக அமைதி முயற்சிகளில் முக்கிய பங்கு வகித்துவரும் கத்தோலிக்க திருச்சபையின் பிரதிநிதி யுவான் லூயிஸ் சுப்பிரியானி தெரிவித்துள்ளார். (இ-10)

## அணுக் கழிவுகள் கண்டுபிடிப்பு

மொஸ்கோ, ஏப். 4

ரஷ்யாவில் யூரல் மலைப் பகுதியில் ஓர் இடத்தில் இலட்சக் கணக்கான மக்களின் உயிரைக் குடிக்கவல்ல அணுசக்திக் கழிவுகள் பாதுகாப்பற்ற முறையில் பீப்பாக்களில் அடைத்து மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததை சில சிறுவர் சிறுமியர் விளையாடும் போது தற்செயலாகக் கண்டு பிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## இஸ்ரேலுக்கு நவீன அமெரிக்க ஹெலிகள்

வாஷிங்டன், ஏப். 4

அமெரிக்காவிடமிருந்து 15 ''பிளக் ஹொக்'' ரக ஹெலிகளையும் 34 ஹெலிக்கொப்டர் இயந்திரங்களையும் இஸ்ரேல் வாங்கவுள்ளது. அவற்றின் மதிப்பு சுமார் 20 கோடி டொலர்களாகும்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு நாடாளுமன்றத்திடம் இத்தகவலை முறையாக அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் இஸ்ரேலின் இராணுவ ஆற்றல் முதன்மையாக இருக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா கவனமாக இருந்து வருகிறது.

இஸ்ரேலிய, அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர்கள் வாஷிங்டனில் சந்திக்கவுள்ள இந்த வேளையில் ஹெலிக் கொப்டர்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ-10)


சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ. உ)

கண்ணீர் அஞ்சலி

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினரும் இளைப்பாறிய அதிபருமாகிய

கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை

அவர்கள் 02-04-97 இல் காலமானார். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடையும் நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்.
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
(சி/429)



நினைவலைகள்

அன்னை மடியில்: 05 — 01 — 1950

அநியாயர் பிடியில்: 17 — 01 — 1992

அமரர் மருதன் துர்ராசா
(புங்குடுதீவு 6ஆம் வட்டாரம்)

அன்பாக வடிவெடுத்து, அணையாத விளக்காகி, மங்காத புகழுடன் மடிந்துவிட்ட மாதவனே! ஒன்றாக வாழ்ந்துவிட்ட காலங்கள் எம் கண்ணில் நின்றாடுகின்றனவே! நினைவெல்லாம் உன் நிழலாய் இன்றோடு ஆறு ஆண்டு நிறைவு கண்ட போதிலும் குன்றாது உன் நினைவு குவலயத்தில் நாம் வாழும் வரை.

உங்கள் துயரால் வாடும்:
நடராசா (சகோதரன்),
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

6 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(46156)



யா/ கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்
முறைசாராக் கல்விப் பிரிவு
தொழிற்றிறன் பயிற்சிகள் - 1997

1. சுருக்கெழுத்தும் - தட்டச்சும் (ஆங்கிலம்) — க.பொ.த.(சா/த) (ஆங்கிலம் திறமைச் சித்தியுடன்)
2. உடையமைத்தல் — 9ஆம் ஆண்டு சித்தி
3. மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் — 9ஆம் ஆண்டு சித்தி

பாடசாலையை விட்டு விலகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 04 - 1997

அதிபர்

யா/ கனகரத்தினம் ம.ம. வி.
யாழ்ப்பாணம்,
(46155)



நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில். (கிளை I)

கோண்டாவில் (அரசடிப்பிள்ளையார் கோயில் அருகாமை) (கிளை II)

மீண்டும் 05-04-97 இல்
(சனிகாலை 8 மணி)
ஆரம்பம்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

கணிதம் — திரு. S. கருணாகரன்
விஞ்ஞானம் — திரு. இரா. அருட்செல்வம்
ஆங்கிலம் — திரு. S. சந்திரமௌலி
தமிழ் — திரு. ஞான. திருக்கேதீஸ்வரன்
வரலாறு, சமூகக்கல்வி — திரு. இரா. கணேஷ்

(9468)



மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 07 — 1936

உதிர்வு: 07 — 04 — 1994

அமரர் முருகன் நடேசன்
[C. T B. சாரதி பருத்தித்துறை, யோகேஸ்வரி ஸ்ரோர் உரிமையாளர்]

பாசத்தின் திருவுருவாய் எமது ஒளிவிளக்காய் திகழ்ந்த தங்களை அன்புடன் நினைவுகூருகிறோம்.

பிள்ளைகள்; நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, நாகேஸ்வரன், நவரத்தினம் மருமக்களும், பேரப்பிள்ளைகளும்.

குஞ்சந்தோட்டம்,
கொற்றாவத்தை,
சரணவாய் வடக்கு, கரவெட்டி.
(9469)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு நாள் பிறீமா புறொயிலர் குஞ்சுகள், ஓடர்களுக்கு தொடர்ந்து எடுத்துக் கொடுக்கப்படும். அதற்குரிய மருந்து வகைகளும் இலவசமாகவழங்கப்படும். சித்திரை மாதத்துக்குரிய ஓடர்கள் பதியப்படுகின்றன. தொடர்பு:- சுப்பறாங், பலாலி வீதி, திருநெல்வேலி.
[46135]

20 அங்குலம் கொண்ட (Sony) சொனி கலர் தொலைக்காட்சிப் பெட்டி (ரிமோட்கொன்றோல்) புதிய பனை மரங்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும், முகவரி:- செ. சுதாகரன், முத்துமாரிஅம்மன் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
[சி/418]

### மணப்பெண் தேவை

இந்து கௌரவ குடும்பம், வயது 36, புனர்பூசம் செவ்வாய் குற்றமற்ற, வங்கியில் கடமையாற்றும் மணமகனுக்கு அழகிய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு:-மே/பா இல.602 'உதயன்', யாழ்ப்பாணம்.
[46150]

### தவறிவிட்டது

நவரத்தினம் ஜெயராணி என்பவரது 687531787V இலக்கம் கொண்ட விசேட அடையாள அட்டை, மணிக்கூடு, ரூ. 650 பணம் என்பன அடங்கிய பிறவுண் நிற கைப்பை தட்டாதெரு- திருநெல்வேலி ஆடியபாதம் வீதிக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பொ. சபாரட்ணம், கேணியடி, திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[46148]

### மணமகன் தேவை

அரச பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரியும், 28 வயதுடைய, மணப்பெண்ணுக்கு பெற்றோர் சைவபோசன மணமகனைத் தேடுகின்றார்கள். அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:- மே/பா இல. 601, 'உதயன்' யாழ்ப்பாணம்.
[46149]

### காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில், கல்விக் கந்தோருக்கு அருகாமையில், நன்நீர் கிணறு, மலசல கூடத்துடன் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ. நாதன்,36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
[46128]

### ஜோதிடம்

விவாகத்தடை, பிரயாணத் தடை, கல்வித் தடை, குடும்பப் பிரச்சினை தீர, பிரிந்தவர் சேர ஆலோசனை வழங்கப்படும்; பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஜாதகத்துடன் வரவும். குருக்கள், பொய்யாமொழி ஜோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.
(46086)

### திருமண சேவை

சகல மதம், தொழில்சார் மணமக்களது பெற்றோர்களும் பொருத்தமான மணமக்கள் தேர்வுக்கு குறிப்புகள், படங்களுடன் நேரில் வரவும், தொடர்பு: ''சேவை நம்பகம்'' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர்.
[46152]


## MATHS CENTRE

M. M. V. Road, Nelliady.

**A/L 97 DAY CLASS**
**(PAPER CLASS)**


**ஆரம்பமாகி விட்டது**

★ பொருளியல்: திரு. அன்ரனி
★ அளவையியல்: திரு. A. பிரபானந்தன்
★ கணக்கியல்: திரு. A. பிரபாகரன்
★ தமிழ்: திரு. கமலரூபன்
★ வர்த்தகம்: திரு. உதயமோகன்
★ இந்து நாகரிகம்: செல்வி மாதினி

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(சி/426)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு: 09 — 10 — 1948
இறப்பு: 05 — 03 — 1997

அமரர்
### சேனாதிராசா இராமநாதன் (மாமா)
(நயினாதீவு)

அமரர் சேனாதிராசா இராமநாதனின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆறுதல்தெரிவித்தவர்களுக்கும், உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், உறவினர்.**

இல. 40, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
(46141)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 24 — 12 — 1941
இறப்பு: 05 — 03 — 1997

### திருமதி ஆழ்வான் தெய்வி

ஓடி மறைந்ததே அம்மா ஒரு மாதம்!
தேடி அலைகின்றோம்.
உங்கள் பிள்ளைகள் வாடி வதங்குகின்றார்கள்.
பேரப்பிள்ளைகளுக்கும் சொல்லாமல் சென்றியளோ
அப்பம்மா!
வாடாமலர் என்றிருந்த மருமக்கள் உங்கள்
பிரிவால் வாடி மடிய சொல்லாமல்
ஓடிச் சென்றியளோ?
கொடிய நோய் வந்ததோ
மூன்று நாள்களில் உங்களின்
கதையை முடிக்க — அம்மா!
அன்பைச் சுரந்து அமுதாய் தந்த இன்பத் தாயே!
எம்மைத் தாங்க எத்துணை துன்பத்தைச் சுமந்தாய்
— அம்மா
மண்ணில் மறைந்தது உன்னுடலே
மறையா நினைவு மலையென வளரும் — அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துருறும்;
**அன்புக் கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இடைக்குறிச்சி [illegible],
வரணி.
([illegible])

## 31 ஆவது நாள் நினைவில்



பிறப்பு: 1907 — — — —
இறப்பு: 04 — 03 — 1997

### அமரர் கிருட்டி கதிரேசு
(நாகர் கோயில் வடக்கு)

இத்தாவில், பளையில் நல்வயிற்றில் உதித்து
வடக்கு நாகர்கோயிலில் நற்குடியில் புகுந்து
வளங்கள் பலவற்றை வாஞ்சையுடன் பெருக்கி
முள்ளிவாய்க்கால், வன்னியில் உறவுகளை மறந்து
உயிர்நீத்த எமைக்காத்த குலவிளக்கை
எந்நாளும் நாம் மறவோம்.

எம் மெய்ப்பொருளின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மகள் இராசையா பூபதி,**
**மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**பாட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

சி. நவமணி.
நாகர் கோயில் வடக்கு.
(சி-373)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 10 — 1968



மறைவு: 04 — 04 — 1995

### செல்வி விஜயரூபி

அன்பார்ந்த எம்மகளே! அகம் நிறைந்த என்னக்கா! எந்தனது மைத்துனியே! எங்களது பெறாமகளே! கண்மணியெம் மருமகளே! கைதொழுவோம் கடவுளரை. விண்ணுலகில் விஜயரூபி விடிவெள்ளி ஆகுதி நீ எங்களக்கா ளின்மகளே!

உங்கள் பிரிவால் வாடும்:

அப்பா:— திரு. நா. ஏரம்பமூர்த்தி !
அம்மா:— திருமதி ஏ. காமாட்சிப்பிள்ளை,
தம்பி;— செல்வன் ஏ. றமேஸ்,
மச்சான்:— ஆதித்தன்,
மச்சாள்:— நாகேஸ்வரி,
மற்றும் சிற்றன்னைமார்கள்,
மாமா, மாமி (பன்னாலை).

திகிரி,
தும்பளை, பருத்தித்துறை.
(9456)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1932 — 12 — 08
இறப்பு: 1994 — 03 — 28

### திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியை)

திதி: **04 — 04 — 1997**

பல ஆண்டுகள் சென்றாலும் தங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு நீங்காது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**கணவன், பிள்ளைகள், உற்றார்,**
**உறவினர்கள்.**

உப்புக்கேணி வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.
(46007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சாயி வீடியோ அன் ஸ்ருடியோ

பஸ் நிலையம், அச்சுவேலி.

மலரவிருக்கும்

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

வீடியோ படப்பிடிப்பில் குறோ மாக்கி மிக்சர் துணை கொண்டு நவீன மிக்சர்கமரா மூலம் படம் பிடித்திடவும், சொக்கட்டான் மணப்பந்தல், மண வறைகள், கதிரைகள், பூப்புனித நீராட்டு விழா வுக்கு என புதிய முறையிலான அமைப்புக்கள் கொண்ட படப்பிடிப்புக்கள் மற்றும் கறுப்பு வெள்ளை கலர் உட்புற, வெளிப்புற படப்பிடிப்புக்கள், பிறேம் போடு தல் என்பன உங்கள் விருப்பத்துக்கேற்ற வகையில் செய்து கொள்ளலாம்.

**சாயி வீடியோ அன் ஸ்ருடியோ**
**பஸ்நிலையம், அச்சுவேலி.**

(46147)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குநரும், புனித வின்சென்டிபோல் பேரவையின் மத்திய சபை ஆன்ம ஆலோசகருமான,

## அருட்திரு. சி. கி. ஜெபநேசன்

அடிகளாரின் மறைவையொட்டி

எமது இதயஅஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதனை யொட்டி 05 - 04 - 97 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ்/ பேராலயத்தில் இரங்கற் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் சகல பந்திகளின் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

**புனித வின்சென்டிபோல்**
**மத்திய சபையினர்**

யாழ்ப்பாணம். (சி-427)

# பகிரங்க அறிவித்தல்

1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி மரணமெய்திய கொக்குவில் மேற்கு, அரசடி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற **சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி** அவர்கள் விட்டிறந்த பின்வரும் அசையாச் சொத்து வங்கிப்பணம் தொடர்பாக இதனால் யாவருக்கும் அறியத்தருவதாவது :-

காலஞ் சென்ற குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி அவர்கள் தனக்குச் சொந்தமாகவிருந்த அசையா ஆதனமாகிய ''பரியனாலடி'' எனும் ஆதனத்தையும் வங்கிகளில் இருந்த நிரந்தர வைப்புப் பணங்களையும் அதன் மூலம் வரும் வருமானங்களையும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய பாலசுப்பிரமணியம் தவபாலன் ஆகிய எனது முகதாவில் 1994 ஆம் ஆண்டு 02 ஆம் மாதம் 11 ஆந் திகதி நிறை வேற்றிய 1343 ஆம் இலக்க மரண சாதனத்தால் இணுவில் தெற்கு ராஜ்மஹாலைச் சேர்ந்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்பவருக்கு ஈகை செய்துள்ளார். இம் மரண சாதனம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை தற்போது குறித்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் அவர்கள் மேற்கொண்டு வருகிறார் என அறியத் தருகிறேன்.

எனவே குறித்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணியின் அசையா ஆதனம் தொடர்பாகவோ, அவரது பெயரில் வங்கிகளில் உள்ள நிரந்தர வைப்புப் பணம், அதன் வருமானங்கள் தொடர்பாகவோ மரணசாதனத்தின் பிரகாரம் குறித்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்பவருக்கே தனித்து உரித்துள்ளது என்றும் குறித்த நாகலிங்கம் சுந்தரலிங்கம் தவிர்ந்த வேறு யாருக்கும் குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி பெயரில்உள்ள நிரந்தர வைப்புப் பணத்தையோ அல்லது அதன் வருமானத்தையோ வங்கிகள் செலுத்த வேண்டாம் என்றும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

மேலும் குறித்த சுப்பிரமணியம் கைம்பெண் கண்மணி பெயரில் உள்ள ''பரியனாலடி'' எனும் நாமம் கொண்ட கொக்குவில் மேற்கு அரசடியில் உள்ள சொரியல் ஆதனம் ஒரு பிணக்குக்கு உட்பட்ட ஆதனம் என்றும் அது தொடர்பாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் எனவே அவ் ஆதனத்தை எவரேனும் அறுதிவிற்க குத்தகைகொடுக்க அல்லது ஏதாவது சாதனவகையால் கையளிப்புச் செய்ய முயன்றால் அதனை அறுதிவாங்கவோ குத்தகை ஏற்கவோ வேண்டாமென்றும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

இவ்வறிவித்தலை அலட்சியம் செய்து மேற் கூறிய விடயங்கள் தொடர்பாக எவரேனும் செய்து கொள்ளும் செயல்களுக்கு அவர்களே தனித்தும் ஒருமித்தும் பொறுப்பு ஏற்க வேண்டும் எனவும் மேலும் அறியத் தரப்படுகிறது.

**பாலசுப்பிரமணியம் தவபாலன்**
**சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்**
**சத்திய ஆணையாளரும்.**

185/4, கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/425)

# சமய சந்நிதிகளில்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச்சூழல் அப்பகுதி வாழ் மக்களால் சிரமதானம் மூலம் தூய்மைப் படுத்தபட்டு வருகிறது. (ஐ)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர், சாவகச்சேரி பெருங்குளம் வீரகத்தி விநாயகர், நயினாதீவு செம்மணத் தம்புலம் வீரகத்தி விநாயகர் ஆகிய தேவஸ்தானங்களின் வருடாந்த மகோற்சவம் நாளை ஐந்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன. எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று தேர் திருவிழா நடைபெறும். (ஐ 117)

★ ★ ★

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும். புதுவருடத்தினத்தன்று தேர்த்திருவிழா வும் மறுநாள் தீர்த்தத் திருவிழா வும் இடம் பெறும். (ஐ-111)

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக்குமார சுவாமிகோயில் மண்டலா பிஷேகத்தின் 12 ஆம்திருவிழா இன்றுவெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும். ''முருகோதயம்'' என்னும் தலைப்பில் கானகதாவாருதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா சொற்பொழிவாற்றுவார். (ஐ)

## நட்ட ஈடு அடுத்த மாதம்

கொழும்பு, ஏப். 4

குவைத் நாட்டில் பணியாற்றிய போது வளை குடாப் போரினால் வேலையிழந்த இலங்கையருக்கு அடுத்த மாதம் நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

நட்டஈடு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிமனையினால் இம்மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ஒருலட்சத்து 35ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரத்து 385 பேருக்கு நட்ட ஈடு வழங்கப் படவுள்ளது. (ஐ-10)

## ஜே/81 அ. அட்டை

கொட்டடி ஜே/81 கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு, நாவாந்துறை பாதுகாப்புப் படை முகாமில் வைத்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## மலகூடம் அமைக்க நிதிஉதவி

தென்மராட்சி, ஏப்.4

மலசலகூடம் அமைப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப் படும் நிதி உதவி ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மலசலகூடம் அமைக்க விரும்புவோர் தத்தமது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்ற பின்னர் மலசல கூடங்களை அமைக்குமாறும், அனுமதி பெற்றவர்களுக்கே இந்த நிதி உதவி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 12 | 16 |
| 04 | 03 |
| 1943 | 1996 |

## சங்கரப்பிள்ளை இராஜலிங்கம்

திதி:- 04-04-1997

ஓராண்டு சென்றதப்பா ஆறவில்லை எம் இதயம்
பாழும் விதி வந்து பாதியில் பறித்ததப்பா
வாயார அப்பாவென்று அழைத்திடவே
நீங்களில்லை ஆறவில்லை எம் இதயம்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**மனைவி, மக்கள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்.**

118, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (9466)

# IN LOVING MEMORY OF



## Mrs. Joy Mathurarani Paramananthan

(Retd. Teacher, Chundikuli Girls' College)


Died: 04 - 04 - 1996

''For Ever with the Lord''
Sadly missed and
Affectionately Remembered

**By Loved Ones**

71/1, Temple Road,
Jaffna (46133)

# நீங்காத எம் நினைவில் 2 ஆம் வருடம்



| மரணம்: | நினைவு நிகழ்வு: |
|---|---|
| 05 | 05 |
| 04 | 04 |
| 1995 | 1997 |

திருமதி

## வினிபிறட் ராஜலக்ஷ்மி பொன்கலன்

## Mrs. Winifred Rajaluxmy Fontgalan (Bubby)

Deep in our hearts you will always stay
Loved and remembered every day.

மரணத்தை வென்ற மாபரன் இயேசு
தம் இறை அரசில் இவரை ஏற்றுக்கொள்வாராக.

நாளை (05-04-1997) சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு சுண்டுக்குளி, திருமுழுக்கு அருளப்பர் தேவாலயத்தில் இறை இரக்கம் இறைஞ்சும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

(46129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான ஆசிரியர், மாணவர்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 4

★ ஆசிரியர்களும், மாணவர்களும் இராணுவ சோதனை நிலையங்களைத் தாமதம் இன்றித் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

★ ஆசிரியர்களும் மாணவர்களும் காரணமின்றிக் கைது செய்யப்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

★ கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கண்ட கோரிக்கைகளை விடுத்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையின் தலைவர் திரு. சோமபால குணதீரவுடனான சந்திப்பின் போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு. த பஞ்சலிங்கம் ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மகஜர் மூலம் அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

திரு. சோமபால குணதீரவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலேயே முன்கண்ட கோரிக்கைகள் அடங்கும். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்ட ஏனைய சில கோரிக்கைகள் வருமாறு:-

★ யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பல்வேறு வகையான ஆசிரியர்களுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மாணவர்களின் கல்வித்தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அண்மையில் வெளிவந்த பொதுப் பரீட்சைகளின் முடிவுகள் எடுத்துக் காட்டாகும். விசேடமாக ஆரம்பக்கல்விக்கும், ஆங்கிலத்திற்கும், விசேட தொழில்நுட்ப, கவின்கலைப் பாடங்களுக்கும் ஆசிரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. ஏறத்தாழ 800 - க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் எவ்வித வேதனமுமின்றி தற்போது பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களில் தகுதியுடையோருக்கு கல்வி அமைச்சோடு தொடர்பு கொண்டு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுத்தால் ஓரளவுக்கு ஆசிரிய தட்டுப்பாடு நீங்கும்.

★ மாணவர்களுக்குரிய விளையாட்டு உபகரணங்கள் உட்பட கட்புல, செவிப்புல சாதனங்கள் எதுவும் தற்போது பாடசாலைகளில் இல்லை. இவற்றைத் துரிதமாக வரவழைத்துப் பாடசாலைகளுக்கு வழங்கப்படல் வேண்டும். மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகள் உட்பட பாடசாலைகளுக்குத் தேவையான எழுதுகருவிகள், எழுதுதாள்கள் என்பனவற்றைக் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படல் வேண்டும்.

★ இலவசப் புத்தகம், சீருடை என்பன தென் பகுதிப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் அதே காலத்தில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கும் விநியோகிக்கப்படல் வேண்டும்.

★ யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருக்கும் ஆபத்துக்காலக் கொடுப்பனவை உடன் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

★ அண்மைக் காலங்களில் இளைப்பாறிய பாடசாலை அதிபர்கள் பலர் ஓய்வூதியத்தைப் பெறுவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களின் பிரச்சினை தீர கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கி அவர்கள் ஓய்வூதியத்தைப் பெற துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (ஐ)


நவாலி

**அந்திரான் முருகமூர்த்தி கோயில்**

பரிபாலன சபை

**பொதுக் கூட்டம்**

**15 - 02 - 97** இல் நடைபெற்றது. புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்: | திரு. சி. கந்தசாமி |
| உப தலைவர்: | திரு. செ. கந்தையா |
| செயலாளர்: | திரு. செ. நடேசன் |
| உப செயலாளர்: | திரு. நா. மார்க்கண்டு |
| பொருளாளர்: | திரு. செ. நாகரத்தினம் |
| கணக்குப் பரிசோதகர்: | திரு. ம. செல்வரத்தினம் |

8 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர்.

குறிப்பு:-

1995 ஆம் ஆண்டு ஆனிமாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, இடம் பெயர்வுக்குப்பின் திரும்பவும் மீளக்குடியமர்ந்து, இரண்டு நேரம் பூசைகள் நடைபெற்று வருகின்றன. மகாகும்பாபிஷேகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சி. கந்தசாமி** — தலைவர்
**செ. நடேசன்** — செயலாளர்

(46157)



**வலி. கிழக்கு பிரதேச சபை**

நீர்வேலி

**கேள்வி அறிவித்தல்**

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து 16 - 04 - 1997 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே நண்பகல் 12-00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை விசேட ஆணையாளர், வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி என்ற முகவரிக்கும். இணைப் பிரதியை பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 16 - 04 - 1997 ஆம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.

| வேலைகளின் பெயர் | வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1. அச்சுவேலிச் சந்தையில் கொல்களம் அமைத்தல் | 500/- | 100/- |
| 2. இருபாலைச் சந்தைக் கட்டடத்தை திருத்தம் செய்தலும், கொல்களம் அமைத்தலும் | 500/- | 100/- |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 15-04-1997 ஆம் திகதி பகல் 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தினால் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**கதிரவேலு கேதீஸ்வரன்**
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
04 - 04 - 1997

(சி-428)


## வாதுவவில் வெங்காயம்

வடமராட்சி ஏப். 4

ஒரு தொகுதி வெங்காயத்துடன் வாதுவ கப்பல் பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றது. (இ-173)

## சனசமூக நிலை செயற்பாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.4

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் பின்னர் இயங்க முடியாத நிலையில் இருந்த நாவாந்துறை கென்னடி சனசமூக நிலையம் மக்களின் ஒத்துழைப்புடன் கடந்த முதலாம் திகதி தொடக்கம் [illegible] வட்டாரத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (ஐ)

# பரீட்சார்த்த உ. கிழங்கு செய்கை அனலைதீவுப் பகுதியில் வெற்றி!

யாழ்ப்பாணம், ஏப். 4

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் அனலைதீவுப் பகுதியில் மேற்கொண்ட பரீட்சார்த்த உருளைக்கிழங்குச் செய்கை வெற்றியளித்துள்ளது.

அனலைதீவைச் சேர்ந்த 10 விவசாயிகளின் நிலங்களில் இப்பரீட்சார்த்த செய்கை மேற்கொள்ளப்பட்டது. இப் பரீட்சார்த்த முயற்சியின் பெறுபேறுகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் கடந்த மாதம் 25ஆம் திகதி அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திரு த. சிவலோகநாதன், விவசாயப் போதனாசிரியர் திரு. அ ச. நா. இராசையா, விவசாயப் போதனாசிரியர் திரு சி. துரைராசா திருநெல்வேலி பண்ணை உதவி முகாமையாளர் திரு எஸ். சிவனேசன் மேற்படி வித்தியாலய அதிபர் திரு. கு. கணேசமூர்த்தி, அனலைதீவு விவசாய அபிவிருத்திச் சங்க தலைவர் திரு. ச. சிவராசா, அனலைதீவு கிராம சேவை அலுவலர் திரு பொ. அன்பழகன் ஆகியோர் அதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

மேற்படி பரீட்சார்த்த முயற்சி வெற்றி அளித்துள்ள போதும் உரிய காலத்தில் விதை உருளைக்கிழங்கு பெறப்பட்டு நடுகை செய்யப்படாததினால் விளைச்சல் குறைந்துள்ளது என்று கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் உரிய வேளையில் கிழங்கை நடுகை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (ஐ)


**க. பொ. த. சாதாரண தர**

சங்கீத மாணவர்களுக்கான

**ஒலிப்பதிவு இசை நாடா வெளியீடு**

**காலம்:** 04 - 04 - 1997 வெள்ளி
**நேரம்:** மு. ப. 10-00 மணி
**இடம்:** யா/ இராமநாதன் கல்லூரி
**பாடியவர்:** சங்கீதப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் **திரு. S. கணபதிப்பிள்ளை** அவர்கள்
**சிறப்பு விருந்தினர்:** **திரு. நா. வரதராஜா** அவர்கள்
உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயம் - 2

சங்கீத ஆசிரியர்கள், மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**சங்கீத ஆசிரியர்கள்,**
உடுவில் கோட்டம்.

(46154)



**29 ஆம் நாள் நினைவஞ்சலியும்**

**நன்றி நவிலலும்**



திருமதி
சுப்பிரமணியம் கண்மணி

மலர்வு: **04 - 07 - 1930**
உதிர்வு: **07 - 03 - 1997**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், நானாட்டானை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவி கண்மணி இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு, ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கு முகமாக ஈமக்கிரியைகள் நடைபெற்ற பெறாமகன் நாகலிங்கம் தம்பிராசாவினது இல்லத்தில் 04-04-1997 (வெள்ளிக்கிழமை) நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பெறாமகன்:
நாகலிங்கம் தம்பிராசா,
சகோதரர்கள்.

கொக்குவில் மேற்கு,
அரசடி,
கொக்குவில்.

(9460)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயண அலைச்சல்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதும், வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு வருவதும் பெரும் சோதனையும், வேதனையும் கலந்த காரியங்கள்.

ஒரு காலத்தில் — சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் — யாழ்ப்பாணத்தவர் ஒருவர் கொழும்பு செல்ல வேண்டும் என்று மாலை ஆறரை மணிக்கு முடிவு செய்தாற் கூட, அடுத்த நாள் காலையில் அங்கு போய்ச் சேர்ந்து விடலாம். அலுவல்களைச் செய்து முடித்து, அவசியம் எனக் கருதினால் அன்று இரவு ரயில் ஏறி மூன்றாம் நாள் காலையில் தமது வீடு திரும்பிவிடலாம்!

ஆனால் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிருந்து வெளிமாவட்டம் செல்வதும், அங்கிருந்து குடாநாடு வருவதும் எல்லா வகைகளாலும் கஷ்டங்களும், சிரமங்களும் தாமதங்களும் நிறைந்தவையாகவே இருந்தன; இப்போதும் அதுவே நிலைமை.

குடாநாட்டு மக்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. எனினும் அவசர குடும்ப அலுவல் ஒன்றுக்காக இங்கிருந்து செல்வதோ அங்கிருந்து வருவதோ சொர்க்கத்துக்குப் போவதற்கு ஒப்பாகி விட்டது.

கப்பல் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. விமான சேவைகளும் ஓரளவு கணிசமாக நடத்தப்படுகின்றன. ஆனால் முக்கியமான அலுவல் ஒன்றுக்காக, ஆபத்தான நிலையில் உள்ள உறவினரைப் பார்ப்பதற்காக அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பயணம் செய்வது தடங்கலும் தாமதமும் நிறைந்ததாக மக்கள் குறைப்படுகின்றார்கள்.

கப்பலில் பயணம் செய்யும் சாதாரண மக்கள் மாதக் கணக்காகத் தவம் கிடக்க நேரிடுகிறது. சிவில் விவகார அலுவலகத்துக்கும், பொலீஸ் நிலையங்களுக்கும் அலைகின்றனர்.

கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருவதற்காகத் திருகோணமலை வந்த மக்கள் அங்கு பல மாதங்களாகத் தங்கி பலவித 'அரிகண்டங்களுக்கும்' ஆளாக நேரிடுகிறது.

இப்போது நடத்தப்படும் போக்குவரத்துச் சேவைகள் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதாதவை. பயணிகளுக்கான பாதுகாப்பு அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்களும் தடங்கல் தாமதங்களுக்குக் காரணம்.

ஒருவர் ஒரு தடவை குடாநாட்டிலிருந்து வெளியே போய் வருவதற்கு இரண்டு தடவைகள் பாதுகாப்பு அனுமதி பெற வேண்டும். அது போலவே அங்கிருந்து வருபவரும் இரண்டு தடவைகள் பாதுகாப்பு அனுமதி பெற்றாக வேண்டும். அதன் பொருட்டே பல மாதங்கள் அவமாகிப் போகின்றன.

போக்குவரத்துச் சேவைகள் போதாமை, பாதுகாப்பு அனுமதி பெறுதல் ஆகிய இரண்டு விடயங்களிலும் அரசு தக்கவாறு கவனம் செலுத்தி மக்கள் கஷ்டங்களைப் போக்க வேண்டும்.

மாநாடுகளை நடத்திப் பேசுவதால் மட்டும் மக்கள் கஷ்டங்கள், இன்னல்கள், இடைஞ்சல்கள் தீர்ந்து விடா. ஆக்கபூர்வமான நடவடிக்கைகளே தேவை.

# மத்திய தரைப் படகு விபத்தில் தப்பியவர்களில்

# ஈழத்தமிழ் இளைஞர்கள் 51 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், ஏப். 4

கிறீஸுக்கும் இத்தாலிக்கும் இடையேயான மத்திய தரைக்கடற்பகுதியில் கடந்த டிசம்பரில் நத்தார் காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான படகு விபத்தில் இலங்கையர்கள், இந்தியர்கள், பாகிஸ்தானியர் உட்பட நூற்றுக் கணக்கானோர் பலியானது தெரிந்ததே.

சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழைவதற்காக கப்பல் மூலம் தனியார் பயண முகவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட இவர்களில் ஈழத் தமிழர்கள் பலரும் அடங்குவர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் தவிர கடலில் இருந்து மீட்கப்பட்டு கிறீஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட பல தமிழர்கள் கிறீஸில் பின்னர் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழர்களில் ஒருதொகுதியினரின் விவரங்கள் கிறீஸ் செஞ்சிலுவைச் சங்கத்தினால் கொழும்பில் உள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் பட்டியல் கொழும்பிலிருந்து யாழ். செஞ்சிலுவைக் கிளைக்குக் கிடைத்திருக்கிறது.

சம்பவம் நடந்த சுமார் 3 மாதங்களின் பின்னரே 51 தமிழர்களின் விவரங்களும் கிடைத்துள்ளன. இந்த இடைப்பட்ட காலத்தில் இவர்களில் பலர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கக்கூடும்.

எனினும் தமது பிள்ளைகள் குறித்து இதுவரை தகவல் கிடைக்காத பெற்றோரின் நன்மை கருதி பிரஸ்தாப பட்டியலை இங்கு வெளியிடுகிறோம்.

30 - 12 - 1996 இல் கிறீஸின் ஹெர்மியோனி ஆர் கோலிடா சிறையில் வைக்கப்பட்டிருந்தவர்களின் விவரங்கள் இவை.

பாதிக்கப்பட்டவர்களின் முழுப்பெயருடன் அடைப்புக் குறிக்குள் முறையே அவர்களது தந்தை, தாய் ஆகியோரது பெயர்களும் முகவரியும் தரப்பட்டுள்ளன.

★ பாலச்சந்திரன் விக்கினேஸ்வரன் (பாலச்சந்திரன், தையல்நாயகி — கொக்குவில் மேற்கு)

★ மாணிக்கம் சந்துரு (பாலசிங்கம், ஞானேஸ்வரி — நீதிமன்ற வீதி, மல்லாகம்)

★ கான் நவ்பல் (லீயாகுல் அலி, ஐசீமா — கொடிகாமம்)

★ ஐயம்பெருமாள் ஐயமுத்து கலைச்செல்வன் (ஐயமுத்து, பத்மாவதி — சாவகச்சேரி)

★ நாகமணி பரமலிங்கம் கஜதீபன் (பரமலிங்கம், யோகேஸ்வரி, 14பி, மலர் மகள் வீதி, அரியாலை)

★ நடராஜா யோகேஸ்வரன் (நடராஜா, பத்மினி — 91 ஏ. குமரபுரம், கிளிநொச்சி)

★ சவரிமுத்து பெர்னாண்டோ பிரசன்னா (மரியநாயகம், ஜெயச்செல்வி — இல 18, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, யாழ்.)

★ இராசையா ராதாகிருஷ்ணன் (சிவஞானம், வசந்தாதேவி — கட்டுவன்)

★ விநாயகர் பிரேமச்சந்திரன் (தர்மலிங்கம், நாகேஸ்வரி — பாற்பண்ணை வீதி, கோப்பாய்)

★ மாணிக்கம் ஜெனி (கந்தசாமி, ராஜேஸ்வரி, — டச்சு வீதி, உடுவில்)

★ நமசிவாயம் காந்தேவன் (இராஜகோபால், வரதா — மண்கும்பான் மேற்கு, வேலணை)

★ முருகேசு கிஷோக் குமார் (தில்லைநாதன், லூர்த்தம்மா — 212, மருதடி ஒழுங்கை, நல்லூர்)

★ மனுவேற்பிள்ளை அன்ரனி டெனிஸ் (யோஸாட், அன்ரனி ஷசலி அம்மா) — நாவாந்துறை வடக்கு)

★ முருகேசு பரஞ்சோதி (கணபதிப்பிள்ளை, செல்வமுத்து — விக்காவில், காரைநகர்)

★ சிவநாதன் கௌதமன் (செல்லப்பா, பூமணி — கொழும்பு)

★ செல்லையா சிவபாத சுந்தரம் அன்புதாசன் (சரோஜினி சிவபாதசுந்தரம் — கொட்டாஞ் சேனை, கொழும்பு)

★ சின்னத்தம்பி தங்கவேலாயுதம் சிவபாலன் (தங்கவேலாயுதம், அரியவதனி — அல்வாய் கிழக்கு)

★ வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன் (கணபதிப்பிள்ளை, மகேஸ்வரி — சண்டிலிப்பாய்)

★ வேலுப்பிள்ளை செல்வநாயகம் முகுந்தன் (செல்வநாயகன், சந்திராநந்தி — பரந்தன்)

★ அந்தோனிப்பிள்ளை பாக்கியநாதன் அன்ரனி யேசுதாஸ் (பாக்கியநாதன் ஞானபாக்கியம் — வசாவிளான் பலாலி வடக்கு)

★ மார்க்கண்டு சாமிநாதன் சசிக்குமார், (சாமிநாதன், சந்திராதேவி — கந்தரோடை மேற்கு)

★ கந்தையா மாணிக்கம் தனிவிதிராஜா (மாணிக்கம், பூமணி — புத்தூர் மேற்கு)

★ சின்னத்தம்பி கந்தையா, பிரபாகரன், (கந்தையா புவனேஸ்வரி — கொடிகாமம்)

★ நடராசா குணரட்ணம் யோகானந்தம் (குணரட்ணம், தவமணி — குடமியன் வரணி)

★ தம்பு கந்தசாமி காண்டீபன் (கந்தசாமி, கண்ணாம்பாள் — குடமியன், வரணி)

★ தர்மன் காசி கேதீஸ்வரன் (காசி, சின்னமணி — இடைக்குறிச்சி, வரணி)

★ பொன்னையா செல்லத்துரை தவராசா (செல்லத்துரை, நாகம்மா — குடமியன் வரணி)

★ மரியேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் (அந்தோனிப்பிள்ளை அனிரோஸ்—15, கால்வாய்க்கரை, நீர்கொழும்பு)

★ கணபதி ஐயாத்துரை கனகாதரன் (ஐயாத்துரை, வசந்தாதேவி — மனைவளவு கரவெட்டிமத்தி)

★ மாரிமுத்து கனகசபை சிபித்திரன் (கனகசபை, தையல் நாயகி — 54/21, ஆத்திசூடி வீதி, யாழ்.)

★ பஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை ஜெராட் ஜோன். (முகவரி தெளிவில்லை)

★ முத்தர் மாணிக்கம் தவத்துரை (முத்தர், மாணிக்கம் — கதிரிப்பாய்)

★ இளையவர் வல்லிபுரம் பரமேஸ்வரன் (வல்லிபுரம், பரமேஸ்வரி — அம்பனை)

★ மாணிக்கம் இராஜரட்ணம் சிவதர்சன் (இராஜரட்ணம், தேவராணி—மயிலணி, சுன்னாகம்)

★ முருகையன் கணேசலிங்கம் செந்தீபன் (கணேசலிங்கம், சகுந்தலாதேவி — மயிலணி, சுன்னாகம்)

★ சிவசம்பு பத்மநாதன் ரவீந்திரன் (பத்மநாதன், சரஸ்வதி — மயிலங்காடு, சுன்னாகம்)

★ வேலுப்பிள்ளை புஸ்பராசா பிரசாந்த் (புஸ்பராசா விஜயகலா — புலோலி தெற்கு)

★ கதிரவேலு துரைராஜா விஜயகோபி (துரைராஜா, மனோரஞ்சி | பிளாக் வீதி, சங்கானை)

★ லூயிஸ் ஞானதாஸ் தேவரஞ்சன் (மேரி ஜஸிந்தா — பொந்தி ஒழுங்கை, பண்டத்தரிப்பு)

★ வேலுப்பிள்ளை கமலாகரன் பிரதீபன் (கமலாகரன், புஸ்பராணி — புலோலி தெற்கு)

★ தம்பி முத்தையா தயாளன் (முத்தையா. தங்கமணி — மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)

★ சின்னத்தம்பி செல்லத்துரை, கிருஷ்ணராசா (செல்லத்துரை சிவபாக்கியம் — வாரிவளவு, காரைநகர்)

★ கந்தையா இராஜரட்ணம இராஜராஜேஸ்வரன் (இராஜரட்ணம், ரதிதேவி — 66, நெடுங்குளம் வீதி, அரியாலை)

★ சுப்பிரமணியம் தாமோதரம்பிள்ளை ரவிச்சந்திரன் (தாமோதரம்பிள்ளை, சிவபாக்கியம் — நவக்கிரி, புத்தூர்)

★ இரட்ணம் தர்மகோவிலம் இலங்கேசன் (தர்மகோவிலம், குகனேஸ்வரி — நுணாவில் சந்தி)

★ சங்கரன் செல்லன், யோகராஜன் (செல்லன், சின்னப்பெட்டை — நவபுரம் கைதடி)

★ நாகலிங்கம் துரைராஜலிங்கம் அருள்ராஜ் (துரைராஜலிங்கம், இராஜலட்சுமி — செம்பிறைக்கட்டி இறக்கம், யாழ்ப்பாணம்)

★ கந்தவனம் செல்வரட்ணம் சந்திரசேகரம் (செல்வரட்ணம், ஞானேஸ்வரி— தாவளை, இயற்றாலை)

★ வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு ஜெய்சங்கர் (திருநாவுக்கரசு, கனகம்மா — கரவெட்டி மத்தி)

★ ஆழ்வார் கந்தசாமி இராஜராஜன் (கந்தசாமி, சின்னம்மா —தச்சன்தோப்பு ஒழுங்கை, கரவெட்டி மத்தி)

★ வயிரவன் கிட்ணன் ரவீந்திரன் (கிட்ணன், இராஜேஸ்வரி — கைதடி நாவற்குழி)

# இறைவன் மறைந்து நிற்பவனே!

கடவுளைக் கண்டவர் நம்மில் யாரும் இல்லை. கண்ணுக்குத் தெரியாத ஒன்றை உண்டு என்று ஏற்றுக் கொள்ள அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடக்கும் மனித மனம் இசைவதில்லை. கண்ணுக்குத் தெரியாமையால் 'இல்லை' என்று கூறுவோம், இருந்தால் கண்ணுக்குத் தோன்றவில்லையே என்று வாதிடுவோரும் உளர்.

இருக்கிறதோ இல்லையோ யார் அறிவார்? — என்று ஐயுறுவோரும் உளர். இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற வாதமும் இல்லை என்ற எதிர்வாதமும் இன்று மட்டும் அல்ல, என்றுமே இருந்ததாக அறிய முடிகின்றது. இரணியகசிபுவும் அவன் மகன் பிரகலாதனும் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

இறைவனின் வியாபகத்தை மக்களுக்கு உணர்த்தி, அஞ்ஞான இருளைப் போக்க ஞானிகளும், சித்தர்களும். நாயன்மார்களும், ஆழ்வார்களும் காலத்துக்குக் காலம் பூமியில் அவதாரம் செய்திருக்கின்றார்கள். அவர்களுடைய அனுபவ ஞானம் தேவார திருவாசகங்களாகவும், திருவாய் மொழிகளாகவும், பிரபந்தங்களாகவும் பெருக்கெடுத்துப் பாய்ந்து ஆன்மீக உலகை வளப்படுத்தியுள்ளன.

நாவுக்கரசர் பெருமான், சிவபிரான் கைலயங்கிரியில் வீற்றிருக்கும் காட்சியைத் திருவையாறு என்னும் சிவத்தலத்தில் தரிசிக்கும் பேறு பெற்ற அருளாளர். "கண்டறியாதன கண்டேன்" என்று களிப்புடன் பாடி ஆனந்தமடைந்த சரியைத் தொண்டர்.

தனது அனுபவ ஞானம் மற்றவர்களுக்குப் பயனுள்ள நெறியாக அமையட்டும் என்ற உயர்ந்த எண்ணத்தினால், இறைவனைக் காணும் வழியை நமக்கு உபதேசித்துச் சிவத்துடன் கலந்து விட்டவர். இறை நாட்டம் கொண்டோருக்கு அது கற்கண்டுப் பொங்கல் போன்று தித்திக்கும்.

விறகிலே தீயும், பாலிலே நெய்யும், மணியிலே ஒளியும் இல்லை என்று கூற யாரும் முன் வரமாட்டார்கள். விறகை ஒன்றுடன் ஒன்று உராயத் தீயும், பாலில் இருந்து பெறப்படும் தயிரைக் கடைய நெய்யும் கூழாங்கல்லாகத் தோன்றும் வைரத்தைப் பட்டைதீட்ட ஒளி வீசும் மணியும் உருவாகும்.

விறகிலே தீ போலவும், பாலிலே நெய் போலவும் மறைந்து நிற்கும் இறைவனை ஊனக்கண் கொண்டு காண இயலாது. "பக்தி (அன்பு உறவு) என்னும் மத்தை ஞானம் (அறிவு உணர்வு) என்னும் கயிற்றுடன் இணைத்து இடையறாது முறுக்கி இழுக்க உன்னுள்ளே ஒளிந்திருக்கும் இறைவன் தோன்றுவான்" என்று தனது அனுபவ உண்மையைப் பேசியுள்ளார்.

விறகில் தீயினன் பாலில் படு
நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்
சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வுக்
கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய
முன்னிற்குமே.

கருணைக் கடலான இறைவன் தன்னை நினையாதவர் உள்ளங்களிலும், அவர்கள் அறியாமலே (மறைந்து நின்று) உறைந்து ஒளிர்கின்றானாம். "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" என்று சிவபுராணம் பாடுகிறார் மணிவாசகப் பெருமான். (ஓர்தல்: உணர்தல்; ஓராதார் அறிவு இருந்தும் ஆணவ இருளால் மறைக்கப்பட்டு, ஆராய்ந்து உணராதவர்)

வேதங்களிலும், பூதங்களிலும், நாதத்திலும், மாயையிலும் பொருந்தி பிரபஞ்சத்திலுள்ள சராசரங்கள் அனைத்திலும் இரண்டறக் கலந்து நிற்பவனே என்று இறைவனை (முருகப் பெருமானை) விழித்துத் திருப்புகழ் பாடுகிறார் அருணகிரிநாதர்.

மாயையைந்து வேதமைந்து
பூதமைந்து நாதமைந்து
வாழ் பெரும் சராசரங்கள்
உறைவோனே.

-மூளாய் அருணாசலம்

## ஞானக்கதிர்

## நாளை

**பங்குனி 23**

சனிக்கிழமை

திதி: திரயோதசி
இரவு 9.23 வரை.
நட்சத்திரம்: சதயம்
காலை 7.41 வரை.
பூரட்டாதி மறுநாள்
வைகறை 6.06 வரை.
சனிப்பிரதோஷ விரதம்
சுபநேரம்: [illegible]-4.39
ராகுகாலம்: 09.09-10.39
(பகலுக்கும் இரவுக்கும்
பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படாவிடின்

# தோட்ட தொழிலாளர் புலிகள் பக்கம் திரும்புவதை விட வேறு வழி இல்லை

## தொண்டமான் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 4

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு விரைந்து தீர்க்கா விடில், தோட்டத் தொழிலாளர் விடுதலைப் புலிகள் பக்கம் திரும்புவதை விட வேறுவழி இல்லை.

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இ. தொ. காவின் செயற்குழுக் கூட்டத்தில் அவர் இப்படி கருத்து வெளியிட்டார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை மிதவாதிகளாக இ. தொ. கா. வைத்திருந்தது என்றும் தொண்டமான் கூறினார்.

(இ-3-150)

# வவுனியா வந்து உறவினரை அழைத்துச் செல்லக் கட்டுப்பாடு

வவுனியா, ஏப். 4

வவுனியா தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் இரத்த உறவுடைய உறவினர்கள் தெற்கில் ஒருவருடம் நிரந்தரமாக தங்கியிருந்தால் மட்டுமே வவுனியா வந்து அவர்களது உறவினர்களை அழைத்துச் செல்ல முடியும்.

மேற்கண்ட தீர்மானம் ஒன்று நேற்று முன் தினம் வவுனியாவில் நடந்த பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

தெற்கில் இருப்பவர்கள் வவுனியா வந்து தடுப்பு முகாமில் உள்ள தமது இரத்தத்தொடர்புடைய உறவினர்களை அழைத்துச் செல்ல முன்னர் அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் வவுனியாவில் நடந்த பாதுகாப்பு சம்பந்தமான மாநாட்டில் புதிதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

(ஐ-3)

# ஆண்டு ஒன்று முதல் ஆங்கில பாடம்

## அடுத்த ஆண்டு முதல் அறிமுகம்

அடுத்த வருடத்தில் இருந்து பாடசாலைகளில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆங்கில பாடம் போதிக்கப் படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான பரீட்சார்த்த முன்னோடித் திட்டம் ஒன்று காலி மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் ஏராளமான மாணவர்கள் சித்தியடையாமல் இருக்கிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களிலேயே இதுமிக அதிகமாக உள்ளது. கிராமப்புற மாணவர்களிடையே ஆங்கிலத்திலும், கணிதத்திலும் குறைபாடு நிலவுகிறது.

ஆங்கிலத்தை ஒரு கடினமான பாடம் என்றே அவர்கள் கருதுவதாகக் கல்வி அமைச்சின் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. (ஐ)

## புலிகளின் பிரமுகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

எனவும் கூறப்படுகிறது.

தென் ஆபிரிக்காவில் நடைமுறையில் உள்ள அதிகாரப் பரவலாக்கல் சீர்திருத்தங்கள் குறித்து நேரடியாக ஆராய்வதற்காகவே அமைச்சர் பீரிஸ் தற்பொழுது தென் ஆபிரிக்கா சென்றுள்ளார். அவருடன் சட்டமா அதிபர் மற்றும் சட்டவரைஞர் ஆகியோரும் சென்றுள்ளனர். (இ-150-3)

மீண்டும் சேவையில்:

குட்வில் சேவிஸ் நிலையம்

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

அறிவு வளர்ச்சிக்கு:

உயர் கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
D.M.I. கல்வி நிறுவனம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[சி/432]

கண்ணீர் அஞ்சலி

முன்னாள் பங்குத் தந்தை
S. கில்லரி ஜெபநேசன் அடிகளாரின்
மறைவையொட்டி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து 5 — 4 — 97 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு பரிசுத்த கார்மேல் மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

— நிர்வாகிகளும்
பக்திச் சபையினரும்
பங்கு மக்களும்.

பரிசுத்த கார்மேல் மாதா ஆலயம்,
பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (சி/433)

## கப்பல்-விமான பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 4

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று 500 பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ் சிவில் நிர்வாக அலுவலகத்தில் கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 203 முதல் 559 வரையானவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறுகேட்கப்பட்டுள்ளது.

விமானத்தில் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 306 வரை அனுமதி கிடைத்துள்ளது என்றும்—

சிவில் நிர்வாக அலுவலகத்தில் தமது பதிவுகளைப் பதிவு செய்யு மாறும்—கேட்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களில் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் அனுமதி பெற்றவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பயணம் செய்ய வேண்டும் என்றும்—

அதன்பின் அவர்களின் விண்ணப்பங்கள் ரத்துச்செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும்—யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

விமானத்தில் செல்ல அனுமதி கிடைத்த திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் பயணம் செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களும் ரத்துச் செய்யப்படும் என்றும்—தெரிவிக்கப் பட்டது. (இ-3)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 4

நீர்வேலி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று மு. ப 10 30 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 13 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 18 ஆம திகதி மாம்பழத் திருவிழாவும், 20 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் நடைபெறும். இம்மாதம் 21 ஆம் திகதி காலை 7.00 மணிகு தேர்த்திருவிழா இடம்பெறும். (அ)

விக்னா
கல்வி நிறுவனம்
கணக்கியல்
பாலவாசன்
கம்பனி
ஆரம்பம்: 6-4-97
ஞாயிறு: 3.00—4.30 P.M.
(46161)

# சார்ஜாவில் இலங்கை வெற்றி

சார்ஜா, ஏப். 4

சார்ஜாவில் நேற்று ஆரம்பமான மூன்று நாடுகள் பங்கு பற்றும் ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி 7 விக்கட்டுக்களால் சிம்பாப்வே அணியை வென்றது.

முதலில் ஆடிய சிம்பாப்வே அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் ஆடிய இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா 60 ஓட்டங்களைப் பெற்று சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவானார்.

(இ-3)

# வால் நட்சத்திரத்தை இங்கு பார்க்கலாம்

யாழ்ப்பாணம், ஏப். 4

''ஹெல் பொப்'' வால் நட்சத்திரத்தை இப்போது யாழ்ப்பாணப்பகுதியில் வெற்றுக் கண்களால் பார்க்க முடிகின்றது.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலையில் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் இரவு சுமார் 8.10 மணிவரை மேற்கு வானில் வால் நட்சத்திரத்தை வெற்றுக் கண்களால் தாம் பார்த்ததாக தொண்டைமானாறு வெளிக்கள நிலைய இயக்குநர் நா. சுவாமிநாதன் தெரிவித்தார்.

மேற்கு வானில் பேர்சியஸ் உடுவுருவின் கீழ் வால் நட்சத்திரத்தைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்ததாகவும், வானம் இருட்டாக இருந்த போது வால் வெள்ளியின் நீளத்தை அதிக அளவில் பார்க்கக் கூடியதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 9 ஆம் திகதி வரை நட்சத்திரத்தை யாழ். வானில் பார்க்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-ஐ)

## இனப்பிரச்சினைத்..

(முதலாம் பக்கத் தொடர்)

களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகவே இந்த இணக்க நிலை உருவாக்கப்பட்டதாகவும் அமைச்சர் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நெடுந்தூரப் பயணத்தில் எடுத்து வைக்கப்படும் முதலாவது அடி என்றும், வரலாற்றுத் திருப்புமுனை என்றும் இந்த இணக்கத்தினைக் கதிர்காமர் வர்ணித்தார்.

★ ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கத்தின் பிரகாரம்—

★ கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில், கட்சி நலன்களைக் கருத்தில் கொள்ளாது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு இருதரப்புகளும் ஒத்துழைப்பது.

★ இனப் பிரச்சினை தொடர்பான முக்கிய திருப்பங்கள் குறித்து அரசுத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவருக்கு அவ்வப்போது அறிவிப்பார்.

★ விடுதலைப்புலிகள் உட்பட வேறு கட்சியுடன் அல்லது தரப்புடன் நடத்தக் கூடிய எந்தப் பேச்சுவார்த்தையிலும் பொது அணுகுமுறையைக் கையாள்வது.

(அ-3)

## இனப் தீர்வில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சுக்களை நடத்தி இருந்தார்.

கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்ற மூன்றாவது விஜயத்தின்போது அவர் நடத்திய பேச்சுவார்த்தையே புதிய திருப்பத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைத் தீர்வில் பிரிட்டன் மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய சாத்தியத்தை ஏற்படுத்தி உள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வில் வெளிநாட்டு மத்தியஸ்தத்தின் அவசியம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பு ஏற்கனவே கருத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-103)

## பேச்சு நடத்த..

(முதலாம் பக்கத் தொடர்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கம் வரவேற்கத்தக்க விடயம் ஆகும்

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் இனப்பிரச்சினையை தேசியப்பிரச்சினையாகக் கருதவில்லை. இரு கட்சியினரும் ஒத்துப்போகும் பட்சத்தில்தான் இந்தப் பிரச்சினைக்குத தீர்வுகாண முடியும்.

இரு கட்சிகளுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள இணக்கத்தில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதானாலும் அதற்கு ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் கண்டிப்பாக பேச்சு நடக்கும் என்று அறிகிறேன்.

கடந்த வாரம் ஒரு வைபவத்தில் பேசும்போது, பேச்சுவார்த்தைக்கான முனைப்புக்கள் நடப்பதாக கூறியிருந்தேன்.

எனது நாடாளுமன்ற வாழ்க்கையில் அதாவது கடந்த ஏழாண்டு காலத்தில் நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, உலக அரங்கில் பங்குபற்றிய மாநாடுகளிலும் சரி, இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று கூறி வந்தேன். அதில் மாற்றம் இல்லை. அதுதான் யதார்த்த நிலையும் கூட.

பிரிட்டனின் தலையீடு பேச்சுவார்த்தை விடயத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

''வடக்கு—கிழக்கு உள்ள நிலைமையைப் பார்க்கும் போது விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும்'' என்று கடந்தமுறை இலங்கை வந்திருந்த சமயம் பிரிட்டிஷ் அமைச்சர் லியம் பொக்ஸிடம் நாம் கூறினோம்.

அவர் அடிக்கடி இங்கு வந்து போனதில் இருந்து, பிரிட்டன் பேச்சுவார்த்தைக்கான ஆர்வத்தைக் காட்டியதை அறிய முடிந்தது.

நேற்று முன்தினம் இலங்கை வந்த அவர் எமக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். நாம் முன் கூறிய விடயம் பற்றி அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது கட்சி இதை வரவேற்கிறது. ஏனெனில், யதார்த்தமான நிலை புலிகளுடன் பேசத்தான் வேண்டும் என்பதே ஆகும். இதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

பிரச்சினையில் ஈடுபட்டுள்ளவர்களுடன்தான் பேச வேண்டும். அதுதான் எம் கட்சியின் நிலைப்பாடாகும்.

யாரோடு பேசவேண்டுமோ, அவர்களோடுதான் பேச வேண்டுமேயொழிய மற்றவர்களுடன் பேசிப் பயன் இல்லை என்பது தான் என் கருத்து—

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேகன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-04-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org